செ.வெ.எண்: 223 நாள்: 24.03.2019

**வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிய உள்ள அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு.**

---

பாராளுமன்ற பொதுத் தேர்தலையொட்டி இன்று (24.03.2019) புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் வாக்குச்சாவடியில் பணிபுரிய உள்ள அலுவலர்களுக்கு ராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் திருமயம் சட்டமன்ற தொகுதிக்கு அரசம்பட்டியில் உள்ள சண்முகநாத பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி வகுப்புகளை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள். பின்னர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

பாராளுமன்ற தேர்தலையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் 1,538 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிய உள்ள 7,436 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு இன்றையதினம் பயிற்சி நடைபெறுகிறது. இதனை அடுத்து இவர்களுக்கான பயிற்சி கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதியில் புதுப்பட்டியில் உள்ள அரசு பாலிடெக்னிக் வளாகத்திலும், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ஆரியூரில் உள்ள குமரன் பாலிடெக்னிக் கல்லூரியிலும், புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்கு ராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகிறது.

மேலும் திருமயம் சட்டமன்ற தொகுதிக்கு அரசம்பட்டியில் உள்ள சண்முகநாத பொறியியல் கல்லூரியிலும், ஆலங்குடி சட்டமன்ற தொகுதிக்கு ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், அறந்தாங்கி சட்டமன்ற தொகுதிக்கு அறந்தாங்கி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் வாக்குச்சாவடிகளில் பணிபுரிவது குறித்து பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படி வாக்குச்சாவடிகளில் பணிபுரியும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய தங்களது பணிகளை முழுமையாக ஐயமின்றி தெரிந்துகொண்டு சிறப்பாக பணியாற்றும் வகையில் இத்தகைய பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது. இவ்வாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் திரு.தண்டாயுதபாணி, வட்டாட்சியர் திருமதி.பரணி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**